# சத்துருக்கொண்டான் சர்வோதய அபிவிருத்தி கல்வி நிறுவனத்திற்கான நோர்வே தூதுவரின் விஜயம்

இலங்கைக்கான நோர்வே நாட்டு தூதுவரான அதி உயர் அம்மணி கிரேட் லோசென் அவர்கள் அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கான தமது அலுவலக விஜயத்தின் போது சத்துருக்கொண்டான் சர்வோதய அபிவிருத்தி கல்வி நிறுவனத்திற்கு வருகை தந்திருந்தார். கடந்த 09/07/2013 ம் திகதி காலையில் நோர்வே தூதுவர் சத்துருக்கொண்டான் சர்வோதய அபிவிருத்தி கல்வி நிறுவனத்திற்கு வருகை தந்தார். அவரை இந்து சமய கலாச்சார முறைப்படி சர்வோதய கிழக்கு மாகாண இணைப்பாளர் திரு.E.L.A.கரீம் தலைமையிலான சர்வோதய ஊழியர்களும், தொழிற்பயிற்சி பயிலுனர்களும், சர்வோதய உறுப்பினர்களும் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சமுக தலைவர்களும் மகிழ்வுடன் வரவேற்றனர்.

சத்துருக்கொண்டான் சர்வோதய அபிவிருத்தி கல்வி நிறுவனமானது மோட்டார்வாகன திருத்தல் பயிற்சி, மின்னினைப்பு பயிற்சி, அழகுகலை பயிற்சி போன்ற பல்வேறு தொழிற்பயிற்சி நெறிகளை நடாத்தி வருகின்றது. கௌரவ நோர்வே தூதுவர் தொழிற்பயிற்சி பயிலுனர்களுடன் கலந்துரையாடி தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டதுடன் பயிலுனர்களை ஊக்கப்படுத்தினார்.

நோர்வே தூதுவர் தனது விஜயத்தின் பிற்பாதியில் மட்டக்களப்பு மாவட்ட சமுக தலைவர்கள், அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவொன்றை சந்தித்து கலந்துரையாடினார். அங்கு மாவட்டத்தின் தற்போதைய நிலைமை, மக்களின் தேவைகள், சர்வோதய வேலைத்திட்டங்கள், ஒன்றுபட்டு தீர்வுதோடுவோம் செயற்திட்டத்தின் (FAST Project) வேலைத்திட்டங்களான புரிந்துணர்வை வளர்த்தல், சமயங்களுக்கிடையிலான சாந்தி, மற்றும் அரச அதிகாரிகள், உள்ளுராட்சி மன்ற அதிகாரிகளுடனான பிரஜைகளின் ஒன்றிணைந்த செயற்பாடு என்பவற்றின் விளைவுகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. வைத்தியர் கடம்பநாதன் - உளவியல் ஆலோசகர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, திரு.T.சிறிநேசன் - உதவி வலயக்கல்விப் பணிப்பாளர், வண.பிதா.ஒகஸ்டின் நவரெட்ணம் - கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர், திரு.கிருபாகரன் - பொது முகாமையாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மட்டக்களப்பு, வண.மௌலவி.A.S.சிபான், வண.சகோதரர் ஆரியான் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்ட தேசோதய அங்கத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

நோர்வே தூதுவரின் விஜயத்தின் ஞாபகார்த்தமாக கௌரவ நோர்வே தூதுவர் கிரேட் லோசென் அவர்களால் தென்னைமரக்கன்று ஒன்று சத்துருக்கொண்டான் மாதிரிப் பண்ணையில் நடப்பட்டது. அத்துடன் அவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் சர்வோதய நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதார திட்டத்தின் பயனாளிகளான தேற்றாதீவு கிராமத்தில் வசிக்கும் சில பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வீடுகளுக்கும் விஜயம் செய்தார்.